# அவுஸ்திரேலியா

# வளர்நிலை 5

## அரை ஆண்டுப் பரீட்சை
## 2005

சுட்டெண் **(Index) :**

பாடசாலை: வருடம் : 05
மாணவர் பெயர் : திகதி:

1. பின்வரும் பந்தியை வாசித்து, கேள்விகளுக்குப் பதில் எழுதுக. (2x5=10)

நட்பறிதல் என்பது ஒருவர் தாம் நட்புக் கொள்ள விரும்புபவரைப் பற்றி அறிவதாகும். ஒருவருடைய குணநலன்களை அறிந்து நட்புக் கொள்ள வேண்டும். உண்மையான நண்பர்களின் நட்பே நமக்கு உயர்வைத் தரும். அவர்களை நாம் நமக்குக் கேடு விளைகின்ற காலத்தில் அறியலாம். அறிந்தோ அறியாமலோ நாம் தவறு செய்கின்றபோது கண்டித்து எமக்கு அறிவு உரைப்பவர்களே நல்ல நண்பர்கள் ஆவார்கள். தமிழ் இலக்கியங்களில் உயர்ந்த நட்புப்பற்றி நிறையச் சொல்லப்படுகின்றது. வாழ்க்கை வழிகாட்டியான திருக்குறள் நட்பைப் பற்றிச் சிறப்பாகக் கூறுகின்றது. அறநூல்களில் ஒன்றான நாலடியாரிலும் நட்பின் உயர்வு பற்றிப் பாடப்படுகின்றது.

நட்பறிதல் என்றால் என்ன?

______________________________

நாம் உண்மையான நண்பர்களை எப்போது அறியலாம்?

______________________________

தவறு செய்யும்போது கண்டித்து அறிவு உரைப்பவர்கள் யார்?

______________________________

உயர்ந்த நட்பு பற்றி எங்கு நிறையச் சொல்லப்படுகின்றது?

______________________________

வாழ்க்கை வழிகாட்டி என்று சொல்லப்படும் நூல் எது?

______________________________

2. (1x10 = 10)

1) எதிர்ச்சொற்களைத் தெரிந்து இணைக்க.

| | | |
|---|---|---|
| பகல் | - | பதில் |
| முதுமை | - | செயற்கை |
| இயற்கை | - | இரவு |
| கேள்வி | - | நன்மை |
| தீமை | - | இளமை |

11) ஒத்த சொற்களை இணைக்க.

| | | |
|---|---|---|
| வேந்தன் | - | பழங்காலம் |
| மங்கலம் | - | கூர்மை |
| ஒத்திசைத்தல் | - | மன்னன் |
| பண்டைய காலம் | - | சேர்ந்திசைத்தல் |
| நுணுக்கம் | - | நன்நிகழ்வு |

2.சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து அதன்கீழ் கீறிடுக. (1x10 = 10)

முதியவர் பசியால் (மயங்கி, மயங்கிய) விழுந்தார்.
பறவைகள் (பறந்த, பறந்து) சென்றன.
அவன் மரத்தை (வெட்டிச், வெட்டிய) சாய்த்தான்
மாதவி காலையில் (எழுந்து, எழுந்த) கடவுளை வணங்குவாள்.
நாங்கள் (பருகிய பருகி) பானம் சுவையானது
முரளி (விரைந்த, விரைவாக) ஓடினான்.
விமானம் தரையில் (மெதுவாகி , மெதுவாக) இறங்கியது.
அப்பா வேலை செய்து (களைத்துப், களைத்த) போயிருந்தார்.
தபால்காரர் (தபாலைத், தபாலுக்கு) தந்தார்.
விஞ்ஞானி ஆராய்ச்சிகள் (செய்து, செய்த) கண்டு பிடித்தார்

4. **பின்வரும் வாக்கியங்களை இரு வாக்கியங்கள் ஆக்குக.** (2x5=10)
உ.ம்: நான் காலையில் பாலும் பழமும் சாப்பிட்டேன்.
நான் காலையில் பால் சாப்பிட்டேன். நான் காலையில் பழம் சாப்பிட்டேன்.

ஆசிரியர் வகுப்புக்குள் வந்து ஒரு கேள்வி கேட்டார்.

---

ரமா காலையில் எழுந்து உடற்பயிற்சி செய்தாள்.

---

சித்தி மகளை அழைத்துப் பணத்தைக் கொடுத்தார் .

---

அவர்கள் சந்தைக்குக் காரில் ஏறிச் சென்றார்கள்.

---

என் மாமாவும், மாமியும் சிட்னியில் இருந்து வருகிறார்கள்.

---

5. **பொருத்தமாக இணைத்து எழுதுக.** (2x5=10)

| | | |
|---|---|---|
| பாடங்களை ஐயந்தீரக் - | பிடிக்க - | வேண்டும் |
| பூனை எலியைப் - | பறக்க - | ஓடியது |
| நான் பதில் - | கற்க - | விரும்பினேன் |
| பறவைக்குஞ்சு - | தேட - | முயன்றது |
| காணாமல் போன சிறுவனை - | கூற - | முற்பட்டனர் |

6. **பின்வரும் வசனங்களில் உள்ள பிழைகளைத் திருத்தி சரியாக எழுதுக.** (2x5=10)

1. நீயும் உன்னுடன் கோயிலுக்கு வருவாயா?.

---

2. நாங்கள் நேற்று எங்கே செல்வாய்?

---

3. எங்கள் வீட்டில் நாளை கூட்டம் நடைபெற்றன.

---

4. சிந்து தன் தோழிகளுடன் நடந்து போனார்கள்.

---

5. நாய்க்குட்டி மரத்தைச் சுற்றி சுற்றி வந்தன.

---

7. நீர் வெளிநாட்டுக்குப் போக விரும்புகிறீர். போகமுன் என்ன ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என எழுதுக. (1x10 = 10)

8. பின்வரும் சொற்களை வைத்து இரு வேறு பொருள்களில் வசனம் அமைக்க (1ஒ10 ஸ்ரீ 10)

உ.ம்: மாலை, - நான் மாலையில் உடற்பயிற்சி செய்தேன்.
நான் கோயிலுக்கு மாலை கட்டினேன்.

அலை -

மலை -

ஓடு -

ஆடு -

அறை -

9. பின்வரும் வாக்கியங்களுக்கு நிறுத்தல் குறியிடுக. (2x5=10)

உதாரணம்: என் தம்பியின் பெயர் என்ன
என் தம்பியின் பெயர் என்ன?

பச்சை சிவப்பு நீலம் நிறங்களில் உனக்கு பிடித்தது எது

என் பெயர் என்ன என்று உனக்குத் தெரியுமா

அப்படியா உனக்கு பரிசு கிடைத்தது மிக்க மகிழ்ச்சியாக இருக்கிறது

அவர்கள் பாடசாலைக்கு நடந்து போகிறார்கள்

வியாபாரி மரக்கறி பழங்கள் பூக்கள் என்பனவற்றை பைகளில் போட்டுத் தந்தார்

10. பின்வரும் பந்தியை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்க. (10)

ஒரு அரசன் காட்டுக்கு வேட்டையாடச் சென்றான். அங்கே ஒரு அழகிய மானைக் கண்டான். அவன் அதனை எப்படியாவது பிடித்துவிட நினைத்தான். எனவே அரசன் அந்த மானைத் துரத்திக் கொண்டு ஓடினான். ஆனால் மான் அரசனிடமிருந்து தப்பி விட்டது. அரசனுக்கு ஒரே களைப்பாகவும் தாகமாகவும் இருந்தது. அதனால் அவன் தண்ணீர் இருக்குமிடம் தேடித் திரிந்தான். சற்றுத் தூரத்தில் ஒரு விறகுவெட்டியின் குடிசை தென்பட்டது. அந்த குடிசைக்கு அரசன் சென்றான். அரசனைக் கண்ட விறகுவெட்டி அவனுக்கு உணவும் நீரும் கொடுத்து உபசரித்தான். அரசன் விறகுவெட்டியின் உபசரிப்பில் மனமகிழ்ந்து ஒரு பெரிய காட்டையே அவனுக்கு நன்கொடையாகக் கொடுத்தான். அவனும் அதைக் கொண்டு சுகமாக வாழ்ந்தான்.

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

_____